## 127. பார்த்து கொள்ளுவார் பார்த்து

### பல்லவி

பார்த்து கொள்ளுவார் பார்த்துகொள்ளுவார்
என் தேவன் பார்த்து கொள்ளுவார்
நடத்தி செல்லுவார் நடத்தி செல்லுவார்
என் கரம் பிடித்து நடத்தி செல்லுவார்

### சரணங்கள்

1. நான் எதற்கும் கலங்கிடனே
நான் எதற்கும் பயந்திடேனே
யேகோவா யீரே தேவன்
இன்றைக்கும் ஜீவிக்கிறார்
- பார்த்து கொள்ளுவார்

2. எத்தனை தோல்வி வந்தாலும்
நான் புலம்பி அழுவதில்லையே
யேகோவா நிசியான தேவன்
இன்றைக்கும் ஜீவிக்கிறார்
- பார்த்து கொள்ளுவார்

3. எந்தவித நோய்கள் வந்தாலும்
நான் முடங்கி போவதில்லை
யேகோவா ரா.ஃ.பான தேவன்
இன்றைக்கும் ஜீவிக்கிறார்
- பார்த்து கொள்ளுவார்

4. பலவித கலக்கம் வந்தாலும்
நான் குழம்பி போவதில்லை
யேகோவா ஷாலோம் தேவன்
இன்றைக்கும் ஜீவிக்கிறார்
- பார்த்து கொள்ளுவார்